பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 251 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 11 சனிக்கிழமை (27.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்த கர்ப்பவதி உயிரிழப்பு


### மருத்துவ பரிசோதனைக்காக சென்றபோது பொன்னாலையில் சோகம்

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளில் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்து செல்லப்பட்ட கர்ப்பவதி ஒருவர் பொன்னாலைப் பாலத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஜெயநந்தன் தேவப்பிரியா (வயது- 23) என்ற இளம் பெண்மணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 11

## விடுதலையானார் ரஞ்சன் ராமநாயக்க




(கொழும்பு)
"நான் கட்சி மாற மாட்டேன்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய நிபந்தனையுடனான பொது மன்னிப்பின் கீழ் நேற்று பிற்பகல் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட் 11

# நிதி நெருக்கடியை தீர்ப்பது தொடர்பில்

### ஐ.எம்.எவ் பிரதிநிதிகளுடன் ரணில் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை



(கொழும்பு)
**தற்போது நிலவும் நிதி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.**

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடலில் இணைந்து கொண்டதுடன் இரு தரப்பிலும் சாதகமான கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மின்கட்டணத் 11

### வடமராட்சி கட்டைக்காட்டில்

## மூன்று மீன்பிடி வாடிகள் தீயில் எரிந்து நாசம்

(கரணவாய்)
வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு பகுதியில் மூன்று மீன்பிடி வாடிகள் தீ பரவியதால் முற்றாக எரிந்து நாசமாகின.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வாடிகள் தீயில் எரிவதை பார்த்த 11

### பாதாள உலக கும்பலை

## ஒடுக்கும் நடவடிக்கை இன்றுமுதல் ஆரம்பம்

### பாதுகாப்பு அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)
பாதாள உலக கும்பலை ஒடுக்கும் விசேட நடவடிக்கையொன்று இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸ் தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 11

### இராணுவத்தளபதி யாழ். விஜயம்

## சர்ச்சைக்குரிய கட்டுவன் - மயிலிட்டி வீதியையும் திறந்து வைத்தார்

(யாழ்ப்பாணம்)
கட்டுவன் - மயிலிட்டி வீதியில் இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்த 480 மீற்றர் வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்பட்ட நிலையில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இராணுவத்தளபதி லித்தும் லியனகே குறித்த வீதியை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வலிகாமம் வடக்கில் சுமார் 30 வருட 11

## கிளிநொச்சியில் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பாரதிபுரம் மத்திய வீதியில் எதிரெதிரே பயணித்த மோட்டார் சைக்கிளும், கப் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 30 வயதுடைய துரைராசா டிலக்சன் என்னும் இளம் குடும்பஸ்தர் சம்பவத்தில் உயிரி 11

## பல குழந்தைகள் பசியுடன் படுக்கை செல்கின்றனர்

### இலங்கை தொடர்பில் ஐ.நா.

(கொழும்பு)
இலங்கை நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் உள்ள பல குழந்தைகள் "பசியுடன் படுக்கைக்குச் செல்கிறார்கள்" என்று ஐக்கிய நாடுகள் சபை நேற்று தெரிவித்துள்ளது.


ஏனைய தெற்காசிய நாடுகளும் இதேபோன்ற பற்றாக்குறையை எதிர்நோக்கக்கூடும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

உணவு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இறக்கு 11

### கியூ. ஆர் முறைமை நிரந்தரத் தீர்வு அல்ல

## வங்கி அனுமதி பிரச்சினையே எரிபொருள் இறக்குவதில் தாமதம்


### எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)
தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு கியூ. ஆர் முறைமை திட்டவட்டமான தீர்வாகாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்கந்தனின் கொடியிறக்கம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தப்பெருமானது திவ்ய மகோற்சவத்தினில் 25ஆம் நாளான நேற்று மாலை துவஜா அவரோகணம் எனப்படும் கொடியிறக்கம் இடம்பெற்றது

வசந்தமண்டப பூஜையினை தொடர்ந்து எம் பெருமான் கஜவல்லி மகாவல்லி சமேதராய் சண்டேஸ்வரருடன் ஸ்தம்ப மண்டபத்துக்கு எழுந்தருளியதை தொடர்ந்து விசேட பூஜைகள் இடம்பெற்று மாலை ஐந்து மணியளவில் கொடியிறக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து மௌனோட்சவமும் இடம் பெற்றது. (ம-7)

# சந்நிதி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

"அன்னதானக் கந்தன்" எனப் போற்றிச் சிறப்பிக்கப் படும் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் இவ்வாலய மஹோற்சவப் பெருவிழா நடைபெற உள்ளது.

8ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் சப்பரத் திருவிழாவும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை 6 மணியளவில் மௌனத் திருவிழாவும் இடம் பெறும். (ம-18)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனுக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 27.08.2022 சனிக்கிழமை தொடக்கம் 02.09.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4800)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745


# ரஞ்சனுக்கு முழுமையான விடுதலை கிடைக்கவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

"ரஞ்சன் ராமநாயக்கவுக்கு முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. எனவே, அவர் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடுவதற்கு முழுமையாகச் சுதந்திரம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கின்றேன்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ரஞ்சன் ராமநாயக்கவுடன் நேற்று மாலை இணைந்து நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார். (ம-7)


**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நம்பகமான பணிப்பெண் தேவை.
அனுபவம் உள்ளவர்கள்
வீட்டு வேலைகள், சமையல் நன்கு தெரிந்தவர்கள்
உடன் தொடர்புகொள்ளவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(12528)

076 287 8655


# மரண அறிவித்தல்

## நாகராசா நாகதாசன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1962.11.02 | 2022.08.26 |

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வைத்திய சாலை வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா நாகதாசன் அவர்கள் நேற்று (26.08.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் கிருஸ்ணதாஸ் (திரு - கனடா), காலஞ்சென்ற சிறிகலா மற்றும் ஜெயகலா (பிரான்ஸ்), வனிதா, தனுஜா (பிரான்ஸ்), பாஸ்கரதாஸ் (பிரான்ஸ்), சாருஜா, மனோஜா, ஜசோதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற லோகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகினிதேவி (பாப்பா), மல்லிகாதேவி (குஞ்சு), கமலாதேவி (சின்னத்தங்கச்சி), தவமணிதேவி (ராசாத்தி), விமலதாஸ் (ராசன் - பிரான்ஸ்), மோகனதாஸ் (கோபால் - பிரான்ஸ்), விக்கினேஸ்வரி (ஈசு), சாந்தி (பிரான்ஸ்), இன்பதாஸ் (இன்பன் - பிரான்ஸ்), திலகதாஸ் (திலகன் - நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
077 635 3658

(C-4802)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை விநாயகராசா

(ஓய்வுநிலை ஊழியர் - கரவெட்டி பிரதேச சபை)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.12.1957 | 26.08.2022 |

அல்வாய் வடக்கு மடத்துக் கடவையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை விநாயகராசா நேற்று (26.08.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் அரியாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவநாமம் - நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியகுமாரியின் அன்புக் கணவரும் திருமதி வானதி சுகிர்தன் (தபால் அதிபர் - கரவெட்டி), திருமதி எழில்நிலா சசிகுமார் (இத்தாலி), கிருஷிகேசன் (ஆசிரியர் - யா/நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகிர்தன் (சூரி - தபாலகம், யாழ்ப்பாணம்), சசிக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஸீஸ், அஸ்விகா, சஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் மகாமணிதேவி, பாக்கியராசா, செல்வராசா, ஸ்ரீமணிதேவி, மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சதாசிவம் மற்றும் மீனாட்சியம்மா, சிவனேஸ்வரி, கலாபூசணம் சிவநேசன், ஸ்ரீநந்தனா, கலாபூசணம் சிவதாசன், ஜெயராசா, அமரர் ஜெயச்சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2022) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

(C-4801)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்கள் மத்தியிலும் சிந்தனை மாற்றம் ஏற்படும்

## சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர்

(சாவகச்சேரி)

நாட்டில் இனங்களுக்கிடையே நல்லுறவு ஒன்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உருவாகியிருப்பதாக சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரிப் பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது போராட்டக்காரர்களை கைது செய்வதும் அவர்களைத் தேடி வலைவீசுவதும் சாதாரண நிகழ்வாக மாறி விட்டது.

30 வருட காலத்திற்கு மேலாக தமிழ் மக்கள் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றை எதிர்கொண்டவர்கள்.

சிங்கள மக்களும் இன்று அந்த சட்டங்களை தனிப்பட உணர்கிறார்கள். தமிழர்கள் மீது இந்த சட்டங்கள் பாய முன்னிற்று செயற்பட்ட அமைச்சர் பீரிஸ் உள்ளிட்ட சிலர் இன்று இந்த சட்டங்களை கடுமையாக விமர்சிக்கும் நிலை உருவாகியுள்ளது. இவர்களுக்கு சுடலை ஞானம் பிறந்திருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

எதிர்வரும் 29 ஆம் திகதியுடன் அவசரகாலச் சட்டம் காலாவதியானாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிங்கள இளைஞர்கள் கைதாகும் நிலை உள்ளது.

நாம் அடைந்த துன்பத்தை எதிரிகள் கூட பெறக்கூடாது. 30 வருட காலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலர் கைதாகி சிறையில் இன்றும் வாடுகின்றனர்.

ஆனால் இன்று அந்த பயங்கரவாத தடைச்சட்டம் சிங்கள மக்கள் மீதும் பாய்கின்றது. துன்ப நிலையை 30வருடங்களாக உணர்ந்தவன் என்ற ரீதியாக நான் அதனைக் கண்டிக்கிறேன்.

இந்த இக்கட்டான நிலையில் இன நல்லுறவு மலர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இளைஞர்கள் மத்தியில் இன நல்லுறவு ஏற்படும். சிங்கள மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றம் ஒன்று நிச்சயமாக ஏற்படும்.

எனவே பயங்கரவாத தடைச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட எம்மவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தொடர் கைதுகளும் நிறுத்தப்பட வேண்டும் என மேலும் அவர் வலியுறுத்தினார். (4-30)

## சிறுவர் பூங்கா அமைப்பு தொடர்பாக ஆலோசனைக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் சிறுவர் பூங்கா அமைப்புத் தொடர்பாக அபிவிருத்தி ஆலோசனைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற இருப்பதாக நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத்திற்கு நலன் விரும்பிகள், துறைசார் வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், நிதிப்பங்களிப்பாளர்கள், ஆலோசகர்கள், பொறியியலாளர்கள் என அனைவரும் தாமாக முன்வந்து சிறந்த முறையில் சிறுவர் பூங்காவினை நிறுவுவதற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும் எனவும் மேலும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (4-30)

## அக்காவின் வீட்டில் திருடிய தம்பி அகப்பட்டார்

(அராலி)

வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள இரு வீடுகளில் திருடிய சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரையும் திருட்டுப் பொருட்களை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரையும் வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

சகோதரியின் வீடு மற்றும் அயல் வீட்டில் உள்ள தளபாடங்களை திருடி விற்பனை செய்த 40 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் திருடி விற்பனை செய்த பொருட்களை வாங்கி விட்டு அதனை ஒப்புக்கொள்ள மறுத்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-104)

## நல்லூர் கந்தசுவாமி ஆலய தீர்த்தோற்சவம்





(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ பெருவிழாவின் தீர்த்தோற்சவ உற்சவம் ஷண்முக புஸ்கரணி தீர்த்த கேணியில் நேற்று காலை இடம்பெற்றது.

காலை முதல் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை, ஸ்தம்ப பூஜை என்பன இடம்பெற்று ஆலய தீர்த்த கேணியில் தீர்த்தோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. (4-18-33-104)

## தென்மராட்சியில் மோதல் இரு இளைஞர்கள் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

இதில் எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த 18 வயதான இளைஞன் ஒருவர் தலையில் காயமடைந்த நிலையிலும் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் ஒருவர் கையில் காயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)



புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவருக்கு புலோலி மேற்கு பகுதியில் வீடு அமைப்பதற்கான அடிக்கல்லினை யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர கடந்த புதன்கிழமை நாட்டி வைத்தார். (படம்:மகாலிங்கம்)

அகவை அறுபதில் கால்பதிக்கும் அக்காவிற்கு
இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்
திருமதி.சந்திரராஜன்
புஸ்பலதா
(உப அதிபர் ஏழாலை
சைவ சன்மார்க்க வித்தியாசாலை)
ஆரோக்கியத்துடன்
என்றும் வாழ வாழ்த்தும்





உடன்பிறப்புக்கள்
கேமலதா
விஜியலதா
விஜியகுமார்
மைத்துனன்மார்
விக்கினேஸ்வரன்
றமேஸ்
மைத்துனி
வளர்மதி
பெறா மக்கள்
தாட்சாயினி, நாகதீபன்,
மால்மருகன், சிம்மகி.
மருமக்கள்
தர்சனா, துசானன்.
(12570
சிவபூதராயர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறைடர்ஸ் பிறீமியர் லீக்

# யாழ். இந்துக் கல்லூரி

## மைதமானத்தில் இன்று ஆரம்பம்






பிறைடர்ஸ் பிறீமியர்ஸ் தொடர் மூன்று அனுசரணையாளர்களுடாக வர்ண ஆடை வெள்ளை பந்து கொண்ட சுற்றுத் தொடர் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எமது யாழ். இளைஞர்கள் சர்வதேச அரங்கில் பிரகாசிக்கும் முகமாக திகழ வேண்டும் என்பதற்காக தமிழி, IBC, யாழ்.மாநகரசபை போன்று 3 அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

இத்தொடரின் முதல் போட்டியாக அரியாலை கில்லாடிகள் 100 எதிர் சுழிபுரம் கிறீன்ஷரகன் அணிகள் காலை 8 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. இவ்விரு அணிகளிலும் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 26 கழகங்களிலிருந்து ஏலம் மூலம் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.(4)

## அமெ. பகிரங்க டென்னிஸ்

# ஜோகோவிச் விலகல்



ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, முன்னணி டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச் விலகியுள்ளார்.

தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தால் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் தன்னால் பங்கேற்க இயலாது என அவர் அறிவித்துள்ளார்.

மேலும், ஜோகோவிச் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், 'அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் விளையாட இந்த முறை என்னால் நியூயோர்க்குக்கு பயணிக்க முடியாதது வருத்தம் அளிக்கிறது'என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வரும் வெளிநாட்டவர்கள் கட்டாயம் கொரோனாத் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதும், தொடரில், பங்கேற்போருக்கு தடுப்பூசி கட்டாயம் இல்லை என அமெரிக்க டென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது.


ஆனால், அமெரிக்காவில் நுழைவதற்காக வெளிநாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தடுப்பூசி கட்டாயமாகிறது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2627

### சதுஸ்ரி




### கவிஷா




### லாதுலன்




### துஷானி




### தன்ஷியா




### சுஹ்ரித்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக பரவுகிறது டெங்கு

## கடந்த எட்டு மாதங்களில் சுமார் 52 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோய் தாக்கம் மிக வேகமாக பரவி வரும் நிலையில் கடந்த எட்டு மாதங்களில் 52 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மருத்துவர் நிமல்கா பன்னில ஹெட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் 11 ஆயிரத்து 500 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன் ஒகஸ்ட் மாதத்தில் 5 ஆயிரத்து 600 ஆக குறைவடைந்துள்ளது.

இருப்பினும் எதிர்வரும் காலங்களில் பருவமழையினால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு முழுவதும் 36 ஆயிரம் டெங்கு தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியிருந்தனர்.

இருப்பினும் 2022 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இன்று வரையில் 52 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

பொது மக்களின் ஆதரவின்றி அடுத்த நான்கு மாதங்களில் இந்த எண்ணிக்கையை குறைக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)


**உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு**

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

தொலைபேசி:
076 097 3127
021 221 7603

Viber: 076 636 3378

E.mail:
valampurii@yahoo.com


# இலங்கைக்கான பயணத்தடைகளை நீக்கிய உலக நாடுகள்

(கொழும்பு)

பிரித்தானிய அரசாங்கம்,இலங்கைக்கான பயண ஆலோசனையை நீக்கியுள்ளது.

இலங்கைக்கு மேற்கொள்ளும் அத்தியாவசியப் பயணங்களைத் தவிர ஏனைய பயணங்களுக்கு எதிராக இனி அறிவுறுத்தல்களை விடுப்பதில்லை என்றும் அந்த அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை நோர்வே, பிரான்ஸ் ,சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளும் இலங்கைக்கான பயண அறிவுறுத்தல்களை நீக்கியுள்ளன.

முன்னதாக குறித்த நாடுகள், இலங்கைக்கான அத்தியாவசிய பயணங்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பயண ஆலோசனைகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்

# அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன்.

1. யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் வகை II
2. யா/ புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் வகை II
3. யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் வகை II

தகைமைகள்:

- வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் IIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும்.உதவி. பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு:

- மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தகுதியான அதிபர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று. பூரணப்படுத்தி. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2022.10.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் "யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2022(II)" எனக் குறிப்பிடவும்.

**திரு.மு.இராதாகிருஷ்ணன்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-4797)



# தேவை

எமது சிறுவர் இல்லங்களுக்கு,

**பாரதி சிறுவர் இல்லம் (முல்லைத்தீவு)**
- பராமரிப்பாளர் (பெண்)

**செஞ்சோலை ஆண்கள் சிறுவர் இல்லம் (கிளிநொச்சி)**
- பராமரிப்பாளர் (ஆண்)

தகுதி :- 25 வயதிற்கு மேற்பட்டவர்கள்,
அனுபவம் உள்ளவர்கள்.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.)

உடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் :-**071 535 4500, 071535 4501**

(12565)


# இராசிபலன்

27.08.2022
ஆவணி 11, சனிக்கிழமை
அமாவாசை பிற்பகல் 2.26 மணிவரை

மகம் முன்னிரவு 9.54 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் - உத்தராடம்,திருவோணம்.

**வளவன்**




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை கூடும்,தாழ்ந்த சுபாவமுண்டு,வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்,கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச்சுமை கூடும், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள் , சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.




அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.




உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




தேக நலனில் முன்னேற்றம் காணும் நாள், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு தலைவனாகவும், உணர்வு தொண்டனாகவும் இருக்க வேண்டும்.



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## மன மயக்கம்

விந்திய மலைக் காட்டில் ஒரு மாமுனிவர் இருந்தார். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்று கருதி மக்கள் வந்து அவரை தரிசித்துத் தம் கஷ்டங்களைக் கூறி அவற்றிலிருந்து விடுபட அவர் கூறும் அறிவுரைகளைக் கேட்டுச் சென்றனர்.

தினமும் பலர் தமது கஷ்டங்களைக் கூறக் கேட்டு அம்முனிவர் மனதில் பலவிதமான சந்தேகங்கள் எழுந்தன. "நான் படித்துத் தெரிந்து கொண்டதற்கும் உலக அனுபவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இருப்பதாகத் தெரியவில்லையே. உலகில் தர்மம் தலைதூக்க முடியாமல் அதர்மத்தின் கையே ஓங்குகிறதே. கடவுள் சொர்க்கம் நரகம் என்பதெல்லாம் வெறும் கற்பனைதானா? பொய்யா? இதன் உண்மையை அறிந்தாலே எனக்கு மனநிம்மதி" என எண்ணிக் கொண்டு பல இடங்களைப் பார்த்து வரக்கிளம்பினார்.

வாழ்க்கையிலே விரக்தி அடைந்த அவர் தம் கமண்டலத்தையும் கைத்தடியையும் எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். வழியில் பன்னிரெண்டு வயதான ஒரு சிறுவன் அவரைக் கண்டு புன்னகை புரிந்தான். முனிவர் அவனோடு பேசி அவனும் பல இடங்களைப் பார்க்கக் கிளம்பியவன் என்று தெரிந்து கொண்டு அவனைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு வழி நடந்தார்.

இருவரும் ஓர் ஊரின் எல்லையை அடைந்தார்கள். அங்கு சிலர் அவர்களை வரவேற்று ஊரின் நடுவே உள்ள ஒரு பெரிய மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வீட்டு எஜமானன் அவர்களுக்கு நல்ல விருந்தை அளித்தான். சிறுவனைக் கண்டு மகிழ்ந்து போய் வீட்டு எஜமானன் அவனுக்குத் தங்கக் கிண்ணத்தில் பாயசம் விட்டுக் குடிக்கக் கொடுத்தான். தனக்குப் பரிசாகக் கிடைத்த அந்த கிண்ணத்தை அப்பணக்காரன் தன் உயிரினும் மேலாகப் போற்றி வந்தான்.

அன்றிரவு முனிவரும் சிறுவனும் அந்த மாளிகையில் தங்கினார்கள். மறுநாள் அவர்கள் வீட்டு எஜமானனிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். அவர்கள் போனதும் அந்த மாளிகையே அமளிப்பட்டது. அந்த எஜமானனுக்குப் பிரியமான தங்கக் கிண்ணம் காணவில்லையாம்.

கிண்ணத்தை எடுத்தவன் முனிவரோடு வந்த சிறுவனே. அதை அச்சிறுவன் எடுத்து மறைத்து வைத்ததை முனிவரும் பார்த்தார். அது அவருக்கு மிகுந்த வேதனையை அளித்தது. ஆனால் அவனிடம் "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று எல்லோர் முன்பும் கேட்க ஏனோ அவர் விரும்பவில்லை.


முனிவரும் சிறுவனும் போய்க் கொண்டே இருக்கையில் திடீரென பலத்த மழை பெய்யலாயிற்று. அவர்கள் எங்காவது ஒதுங்க இடம் கிடைக்குமா என்று பார்க்கையில் சற்றுத் தூரத்தில் 'மினுக்' 'மினுக்' என்று சிறு ஒளி தெரியவே அவர்கள் அது வந்த இடத்தை அடைந்தார்கள்.

அது ஒரு சிறிய வீடு. அவர்கள் அதன் கதவைத் தட்டி "ஐயா! நாங்கள் வழிப்போக்கர்கள். மழையில் அகப்பட்டுக் கொண்டு விட்டோம். இன்றிரவு இங்கே தங்க இடம் கொடுத்தால் உங்களுக்குப் புண்ணியம் உண்டு" என உரக்கக் கூவினர். சற்று நேரத்திற்குப் பின் அவ் வீட்டு வேலைக்காரன் முனகிக் கொண்டே கதவைத் திறந்து அவர்களை அழைத்துக் கொண்டு போய் தன் எஜமானன் முன் விட்டான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## என் வழி தனி வழி




மூன்றுமே மதுரை போகும் சாலைகள் தான். அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையுடையது.

என்ன அது?

வலப்பறம் இருப்பது பெரும்பாலும் காட்டுப் பாதை மூங்கில் மரங்கள,வாகை மரங்கள் ,கடம்பு மரங்கள் நிறைந்தது. ஆமைகளும் நீருக்குத் தவிக்கும் மான்களும் இருக்கும். எயினர்கள் குடியிருப்பைக் கடந்து போக வேண்டியிருக்கும்.

அதைக் கடந்தபிறகு வளமான மலை ஒன்று வரும் கமுகு, வாழை ,கரும்பு ,மஞ்சள் என்று செழிப்பான அந்த மலையை வலப்புறமாகக் கடந்தால் மதுரைக்குப் போவீர்கள்.

மூங்கில் செடி நில நீரை வெகுவாக உறிஞ்சிக்கொள்ளும் தன்மை உடையது மூங்கில்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் குளங்களிலும் ஏரிகளிலும் நீர் சீக்கிரம் வற்றிவிடும்.

அதனால் தான் அந்த வழியில் நீருக்குத் தவிக்கும் மான்கள் இருக்கும் என்று குறிப்பிட்டார் அவர்.

எயினார் என்பவர்கள் மிருகங்களை வேட்டையாடுபவர்கள் அவர்கள் வழிப்பறி, கொள்ளைகளில் ஈடுபடுபவர்களாக நம்பப்பட்டார்கள். நாகர்கள் இனத்தைச் சேர்ந்த காட்டுவாசிகள் அவர்கள்.

சரி இடப்புற வழி எப்படிப்பட்டது?

இடப்புற வழி குளங்கள் வயல்கள் பூஞ் சோலைகள் வழியாக திருமாலிருஞ்சோலை என்கிற மலையருகே போய்ச் சேரும். அந்த மலையின் அருகே மூன்று பொய்கைகள் இருக்கின்றன.

அவற்றில் ஒன்று,நீராடினால் முற்பிறப்பின் வினைகளை நமக்குப் புரியவைக்கும் தன்மையுடையது.

இன்னொரு பொய்கை நாம் எண்ணியது கைகூட வைக்கும் தன்மையுடையது. மேலும் ஒரு பொய்கை இருக்கிறதே. அதில் நீராடினால் இந்திரன் இயற்றிய ஐந்திறம் நூலை முழுதும் கற்றுத் தேர்ந்த அறிவைப் பெறுவீர்கள்.

மலையை மும்முறை வலம் வந்து திருமாலைத் தொழுதால் நிலம் பிளந்து தேவதை ஒருத்தி தோன்றுவாள். இம்மை இன்பம் ,மறுமை இன்பம் மட்டுமின்றி எப்போதும் தூயதாக இருக்கும் இன்பம் எதுவென்று கூறுங்கள் என்று கேட்பாள் . அதற்குச் சரியான விடை சொன்னால் வழியைக் காட்டுவாள்.

சரி இடையில் இருக்கும் மூன்றாவது வழி எத்தகையது?

இடைவழி மலர் சோலைகள் சூழ்ந்த ஊர்களின் ஊடே செல்லும் காட்டுவழி அங்கே கானுறைத் தெய்வம் ஒன்று இருக்கிறது.

அது உங்கள் முன் தோன்றினாலும் உங்களைத் துன்புறுத்தாது ஆனால் உங்கள் பயணத்தைத் தடுக்கும் .

அதனிடமிருந்து விலகும் முறை தெரிந்து விலகி நடந்தால் சிறிது தூரத்தில் மூன்று வழிகளும் சேரும் பெருவழியைக் காண்பீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 61

இருப்பினும், திமோஷென்கோ தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். மேலும் திமோஷென்கோவின் கட்சி முடிவை நீதிமன்றத்தில் சவால் செய்தது.

உக்ரைன் ஜனாதிபதி



விக்டர் யானுகோவிச்
2010-2014

பெப்ரவரி 17, 2010 அன்று, யூலியா திமோஷென்கோவின் மேல்முறையீட்டின் பேரில் உக்ரைனின் நிர்வாக நீதிமன்றம் தேர்தல் முடிவுகளை நிறுத்தி வைத்தது. விக்டர் யானுகோவிச் தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவித்த உக்ரைன் மத்திய தேர்தல் ஆணையத்தின் தீர்ப்பை நீதிமன்றம் இடைநீக்கம் செய்தது.

கிரிமியாவில் உள்ள தேர்தல் மாவட்டங்களில் இருந்து ஆவணங்களை ஆராய்வதற்கும், தேர்தல் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளை கேள்விக்குட்படுத்துவதற்குமான அவரது மனுவை கீவ்வில் உள்ள உயர் நிர்வாக நீதிமன்றம் நிராகரித்ததை அடுத்து, பெப்ரவரி 20, 2010 அன்று திமோஷென்கோ தனது மேல்முறையீட்டை வாபஸ் பெற்றார். அதே நாளில் (பெப்ரவரி 20) திமோஷென்கோ, ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாவது சுற்று முடிவுகளை உக்ரைன் உச்ச நீதிமன்றத்தில் சவால் செய்யப் போவதில்லை என்று அறிவித்தார்.

இரண்டாம் சுற்று முடிவுகள் பெரும்பாலும் பிராந்திய ரீதியில் பிரிக்கப்பட் - டிருந்தன. மேற்கு உக்ரைனின் பெரும்பாலான பகுதிகள் திமோஷென்கோவை ஆதரித்தன. கிழக்கின் பெரும்பகுதி யானுகோவிச்சை ஆதரித்தது.

### யானுகோவிச் ஜனாதிபதி பதவி

48.95 சதவீத வாக்குகளைப் பெற்று -திமோஷென்கோவின் 45.47 சதவீதத்தை விட ஒரு குறுகிய முன்னிலையில் - யானுகோவிச் ஜனாதிபதி பதவிக்கு வந்தார்.

சர்வதேச பார்வையாளர்கள் வாக்கெடுப்பு நியாயமானது என்று தீர்மானித்த போதிலும், திமோஷென்கோ முடிவுகளை மோசடியானதென அறிவித்தார் மற்றும் யானுகோவிச்சின் வெற்றியை அங்கீகரிக்க மறுத்து விட்டார் பெப்ரவரி 25 அன்று யானுகோவிச்சின் பதவியேற்பு விழாவை அவரும் அவரது ஆதரவாளர்களும் புறக்கணித்தனர்.

உக்ரைனிய பிரதம மந்திரிகள்



ஒலெக்சாண்டர் துர்ச்சினோவ்
Oleksandr Turchynov
2010-2010

மைகோலா அசரோவ்
Mykola Azarov
2010-2014

பிரதம மந்திரியின் அதிகாரங்களை மேம்படுத்திய 2006 சீர்திருத்தத்தை அரசியலமைப்பு நீதிமன்றம் இரத்து செய்தபோது 2010 இல் ஜனாதிபதி யானுகோவிச் அதிக நிர்வாக அதிகாரத்தைப் பெற்றார். உக்ரைனிய அரசாங்கம் யூன் 2010 இல் ரஷ்யாவுடனான உறவுகளை மேலும் மேம்படுத்தியது. மேலும் அது உத்தியோகபூர்வமாக நேட்டோவில் இணைவதற்கான இலக்கை கைவிட்டது.

**4 மார்ச் 2010 இல், இரண்டாவது திமோஷென்கோ அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, முன்னாள் பிரதம மந்திரி யூலியா திமோஷென்கோ 4 மார்ச் 2010 அன்று பதவியை இராஜினாமா செய்தார். 11 மார்ச் 2010 அன்று அசாரோவ் அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மைகோலா அசாரோவ் அதே நாளில் பிரதமராக நியமிக்கப்பட்டார்.**

யானுகோவிச் நிர்வாகம் மொஸ்கோவை நோக்கி தனது முன்னோக்கைத் தொடர்ந்ததால், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் உக்ரைனில் சட்டத்தின் ஆட்சியைப் (rule of law) பாதுகாப்பது குறித்து கவலை தெரிவித்தனர்.

(தொடரும்)

# இயற்கை அனர்த்தங்களில் சிக்கி பாகிஸ்தானில் ஆயிரம் பேர் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த சில வாரங்களாக பல்வேறு மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில் பெய்து வரும் கடுமையான மழை மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 33 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக காலநிலை மாற்றங்களுக்கான அமைச்சர் "ஷெரி ரஹ்மான்" தெரிவித்தார்.

மேலும் கடந்த சில வாரங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் சுமார் 1,000 இற்கும் மேற்பட்டோர் இறந்திருப்பதாகவும் அதிக எண்ணிக்கையிலானோர் பல்வேறு நோய்த் தொற்றுக்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி காலநிலை கோளாறுகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களை பொருளாதார சரிவில் இருந்து மீட்பதற்கு இன்னும் சிறிய காலம் தேவைப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)


# உக்ரைன் அணுமின் நிலையத்தின் இறுதி செயற்பாடும் துண்டிப்பு

(கீவ்)

உக்ரைனின் 'ஜாபோரிஜியா' பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுள்ள ஐரோப்பாவின் மிகப் பெரிய அணுமின் நிலையத்தின் மீது கடந்த ஒரு சில வாரங்களாக ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வந்திருந்த நிலையில் பல நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் கடுமையான எச்சரிப்பை ரஷ்யாவிற்கு விடுத்து வந்திருந்தன.

மேற்படி அணுமின் நிலையம் முறைப்படி செயலிழக்கப்படவில்லை எனவும் அணுமின் நிலையத்தில் அணுக் கசிவுகள் ஏதும் ஏற்படுமாக இருந்தால் பாரிய உயிராபத்துக்கள் ஏற்படும் என்ற எச்சரிக்கை விடுத்திருந்த போதிலும் ரஷ்யா தனது தாக்குதல் திட்டங்களை நிறுத்தவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ரஷ்யப் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் மேற்படி அணுமின் நிலையத்தின் செயற்பாட்டு நிலையில் காணப்பட்ட மின் கம்பிகள் மற்றும் அணு உலைகள் பாரிய வெடிச்சத்தத்துடன் தனது செயற்பாடுகளை முற்றாக இடைநிறுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



சுமார் 40 வருட தொடர் இயங்குமுறையில் இருந்து வந்த மேற்படி அணுமின் நிலையம் நேற்றைய தினத்துடன் முற்றாக தனது செயற்பாட்டை இழந்துள்ளதாகவும் இதன் எதிர்விளைவுகள் எப்படி இருக்கும் என்பது குறித்து தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உக்ரைன் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை 'ஜாபோரிஜியா' பிரசேத்தினை வெற்றிகரமாக இருளில் மூழ்கடித்து விட்டதாகவும் இன்னும் ஒரு சில நாட்களில் மேற்படி பிரதேசம் முழுவதையும் ரஷ்யக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடுவோம் என ரஷ்யா அறிக்கை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# எரிபொருளில் இயங்கும் வாகனங்களுக்கு அமெரிக்காவில் தடை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் எரிபொருளில் அதாவது பெற்றோல் மற்றும் டீசல் போன்ற எரிபொருளில் இயங்கும் வாகனங்களுக்கான தடைச் சட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாக அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில் எரிபொருள் வாகனங்களுக்கு பதிலாக மின்சாரத்திலும் நைட்ரஜன் வாயுவிலும் இயங்கக்கூடிய வாகனங்களை பயன்படுத்துமாறும் மாற்றீடு செய்யுமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு 35 வீதமும் 2030 ஆம் ஆண்டளவில் 68 வீதமும் 2035 ஆம் ஆண்டு 100 வீதமுமாக மேற்படி மின்சார மற்றும் நைட்ரஜன் வாயுவில் இயங்கும் வாகனங்களை பாவனைப்படுத்துவதற்கான சட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாறிவரும் காலநிலை பாதிப்புக்களில் கலிபோர்னியா மாநிலம் கடந்த காலங்களில் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டமையைத் தொடர்ந்து இந்த இயற்கை சார்ந்த பசுமைப் புரட்சி மேற்கொள்ளப்படுவதாக கலிபோர்னிய செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை அமெரிக்கா தற்போது முகம்கொடுத்து வருகின்ற எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கான ஒரு தற்காப்பு செயல் முறையாகவும் இந்த புதிய சட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2022 - 17.09.2022



அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் துலாம் இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அர்த்தாஷ்டமச் சனி வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே எதிர்பார்ப்புகள் ஓரளவே நிறைவேறும்.

### சிம்ம - சூரியன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான இலாபஸ்தானத்தில், மாதம் முழுவதும் சூரியன் சஞ்சரிக்கிறார். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை ஓரளவு நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தடைபட்ட காரியங்கள் தானாக நடைபெறும். பயணங்களால் பலன் உண்டு. பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

### கன்னி - புதன் சஞ்சாரம்

ஆவணி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு விரயஸ்தானாதிபதி உச்சம் பெறுவதால் விரயங்கள் அதிகரிக்கும். உறவினர் வீட்டு மங்கல நிகழ்ச்சிகளுக்கு கொடுத்து உதவுவீர்கள். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் தோன்றும்.

### வக்கிர புதன் சஞ்சாரம்

ஆவணி 12ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். விரயாதிபதி வக்கிரம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான். பாக்கிய ஸ்தானத்திற்கும் அதிபதியாக புதன் இருப்பதால் தர்ம காரியங்களுக்குச் செலவிடுவீர்கள். பெற்றோர் வழியில் ஒத்துழைப்பு குறையும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம். பணிபுரியும் இடத்தில் திடீர் மாற்றங்கள் ஏற்படும்.

### சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான சுக்கிரன், இலாப ஸ்தானத்தில் லாபாதிபதி சூரியனோடு இணைவதால் பொருளாதார நிலை உயரும். புதிய திருப்பங்கள் ஏற்படும். புனிதப் பயணம் அதிகரிக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் பலவும் நாடிவரும் நேரம் இது. உத்தியோகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். வெளிநாட்டில் இருந்து நீங்கள் எதிர்பார்த்த நல்ல தகவல் வந்துசேரலாம்.




### குரு வக்கிரமும் சனி வக்கிரமும்

மாதம் முழுவதும் குருவும் சனியும் வக்கிரமாக உள்ளனர். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்கிரம் பெறுவது யோகம் தான். புதிய உத்தியோகத்திற்கு முயற்சி செய்தவர்களுக்கு பலன் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். சனியின் வக்கிரத்தால் ஆரோக்கியத் தொல்லை அகலும். விரயங்கள் குறையும். சுபசெய்திகள் வந்து சேரும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் தொழில்வளம் சிறக்கும். பிள்ளைகளின் திருமணத்தை நடத்திப் பார்ப்பீர்கள். இந்த மாதம் வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டால் விருப்பங்கள் நிறைவேறும்.

### பெண்களுக்கான பலன்கள்

குரு மற்றும் சனியின் வக்கிர இயக்கம் உங்களுக்கு நன்மையைத் தரும். எனவே குடும்ப முன்னேற்றம் கூடும். பொருளாதார நிலை உயரும். கணவன் -மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் படிப்பு மற்றும் சுபகாரியம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும் இன்னும் பிற சலுகைகளும் கிடைக்கும். எந்த காரியத்தையும் நிதானமாகச் செய்வதன் மூலம் வெற்றி வந்துசேரும்.

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



சொல்லும் சொற்களை எல்லாம் வெல்லும் சொற்களாக மாற்றும் விருச்சிக இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். குருவின் பார்வை இராசியில் பதிவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

### சிம்ம - சூரியன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு அதிபதி சூரியன், தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பது யோகம்தான். தொழில் முன்னேற்றம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். முன்னோர் சொத்தில் பங்கீடு கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் ஏற்படலாம். பொதுவாழ்வில் புதிய பதவி கிடைக்கும்.

### கன்னி - புதன் சஞ்சாரம்

ஆவணி 8 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம- இலாபாதிபதியான புதன், இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது இலாபம் இருமடங்காகும். பாக்கிகள் வசூலாகும்.

வாகன யோகம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும், உயர் அதிகாரிகளின் ஆதரவும் உண்டு. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்வீர்கள்.

### வக்கிர புதன் சஞ்சாரம்

ஆவணி 12 ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அஷ்டம இலாபாதிபதியான புதன், வக்கிரம் பெறுவது நன்மைதான். தடையாக இருந்த சில காரியங்கள் தானாக நடைபெறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். பணப்புழக்கம் சரளமாகும். 11 ஆம் இடத்திற்கும் அதிபதி புதன் என்பதால், மனநிம்மதி குறையும். குருவின் பார்வையால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

### சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்




ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே குடும்ப வருமானம் உயரும். வாழ்க்கைத் துணைக்கு தொழில் அல்லது வேலை அமைந்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். தொழிலில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

### குரு வக்கிரமும் சனி வக்கிரமும்

மாதம் முழுவதும் குருவும், சனியும் வக்கிரமாக இருக்கிறார்கள். குருவின் வக்கிர காலத்தில் ஒரு தொகை செலவழிந்த பிறகே, மற்றொரு தொகை உங்கள் கரங்களில் புரளும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. சொத்துக்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். சனியின் வக்கிர காலத்தில் எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செய்யுங்கள். வழிபாடுகள் வளர்ச்சியை நல்கும். இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் கலைவாணியை வழிபடுவதன் மூலம் வெற்றி வாய்ப்புகள் வந்து சேரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குருபார்வை உங்கள் இராசியில் பதிவதால் கொடுக்கல் - வாங்கல்கள் திருப்தி தரும். கூடுதல் வருமானம் வந்து சேரும். பக்கத்தில் உள்ளவர்கள் பக்கபலமாக இருப்பர். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். பணிபுரியும் பெண்களுக்கு தலைமையின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த இலாகா மாற்றம், பதவி உயர்வும் உண்டு.

## சொத்துக்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்.
-'புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பட்டாபிஷேகம் நடத்துவதற்கு இராமர்கள் தேவையல்லோ!

தன் வயதின் மூப்புக் காரணமாகத் தனது ஆட்சி அதிகாரத்தை தன் மகன் இராமனிடம் ஒப்படைக்க தசரதச் சக்கரவர்த்தி தீர்மானிக்கின்றார்.

அவ்வாறு தன் பொறுப்புக்களை இராமரிடம் வழங்குவதற்கு தசரதர் மனம் கொண்டார் என்பதற்குள்; ஒரு வயதுக்குப் பின்பு பொறுப்புக்களை இளையவர்களிடம் கையளிக்க வேண்டும் என்ற உண்மை உள்ளடங்கியிருப்பது உணர்தற்குரியது.

இவ்வாறு தசரதர் எடுத்த தீர்மானம் என்பது திடீரென எடுத்ததன்று.

மாறாக, தனக்குப் பின் தன் மகன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து அவனிடம் ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க வேண்டும் என்ற நினைப்போடு, ஆட்சிக்குரியவனாக இராமனை தசரதர் பயிற்றுவித்தார் என்பது தான் இராமாயணத்தில் இருக்கக்கூடிய அரசியல் சிறப்பு.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அதாவது அனைவரும் போற்றக்கூடிய வகையில் ஆட்சி செய்த தசரதச் சக்கரவர்த்தி தன் இராச்சியத்தை - ஆட்சி அதிகாரத்தைக் கையளிப்பதற்கு இராமன் தேவை என்று நினைத்தார்.

இதை இன்னும் தெளிவுபடுத்திக் கூறுவதாக இருந்தால், தனது அடுத்த இளம் தலைமுறை ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே தனது ஆட்சிப் பரிபாலனம் இன்னும் இன்னும் சிறப்படையும் என்ற நினைப்போடு இளம் தலைமுறையை உருவாக்க வேண்டும் என்பதை தசரதரின் செயல் இவ்வுலகுக்கு உணர்த்தி நிற்கிறது.

ஆம், தசரதர்கள் தங்கள் இராச்சியத்தை ஒப்படைப்பதாக இருந்தால், அதற்கு இராமர்களும் தேவை என்பதை கம்பராமாயணம் நமக்குக் கற்றுத் தருகிறது.

இங்குதான் எங்களின் இளம் தலைமுறை குறித்த வேதனையும் கவலையும் மேலெழுகிறது.

ஆம், முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களும் அதற்குக் குறைந்தவர்களில் ஒரு பகுதியினரும் கடவுள் வழிபாடும் இறை நம்பிக்கையும் கொண்டவர்களாக இருப்பதுடன் எமது பண்பாட்டு விழுமியத்தைப் பேண வேண்டுமென்பதில் மிகவும் கருசனையாக இருக்கின்றனர்.

ஆனால், அதேநேரம் முப்பது வயதுக்குக் குறைந்த ஒரு பகுதி இளவல்களின் செயற்பாடுகள் - அவர்களின் ஆடைக் கலாசாரங்கள் - வார்த்தைப் பிரயோகங்கள் - ஆலயத்துக்குச் செல்கின்ற முறைகள் என்பவற்றைப் பார்க்கும்போது, இராமர்களை உருவாக்கத் தவறிய தசரதர்களாக நம்மவர்கள் இருப்பதை உணர முடிகிறது.

உண்மை, ஆலயப் பெருந்திருவிழாக்களில் ஒரு பகுதி இளைஞர்கள் நடந்து கொள்ளும் முறைகள், நம் பிள்ளைகளா இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

அந்தளவுக்கு அவர்களின் நடை உடை பாவனை பேச்சு என அனைத்தும் சகிக்க முடியாதவை.

இந்த நிலைமை வேதனைக்குரியது. இவர்கள் தொடர்பில் பெற்றோர்களும் ஊரும் உறவும் சமூக அமைப்புகளும் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் எங்கள் தமிழ் இனத்தின் எதிர்காலம் இராமர்கள் இல்லாத தேசமாகிப் போகும். கவனம்.

## முச்சக்கரவண்டிகளை மின்மயமாக்கும் முன்னோடித் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையுடன் 300 முச்சக்கரவண்டிகளை மின்மயமாக்கும் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிசாந்த வீரசிங்க தெரிவித்தார்.

மேலும், நாட்டில் நிலவும் பெற்றோலிய நெருக்கடிக்குத் தீர்வாகவே இந்தத் திட்டம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இத்திட்டம் தொடர்பான சட்டப் பின்னணியை தயாரிப்பதற்கான முன்மொழிவுகளை பெற்றுக் கொள்ளும் விசேட மாநாடு எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த முன்னோடித் திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

மறைந்த சுயாதீன ஊடகவியலாளர் அமரர் ஞானப்பிரகாசம் பிரகாஸின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நண்பர்களால் ஏற்பாடு செய்து நடத்தப்படும் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-18)

## 'ஆட்காட்டி' கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியா வாழ் வேணி சதீஸின் ஆட்காட்டி கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் ஓய்வுநிலை பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## ரஞ்சனுக்கு தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி

### சஜித் பிரேமதாஸ உறுதி

(கொழும்பு)

சந்தர்ப்பம் கிடைக்கும் போது ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளதாக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் செய்தியில், எதிர்க்கட்சித் தலைவர் பதவி வெற்றிடமொன்று ஏற்பட்டால் தேசியப் பட்டியல் மூலம் நியமனம் வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி இணங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2021 ஜனவரியில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரது தண்டனையைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று நிபந்தனையுடன் கூடிய ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மன்.காற்றாலை மின் திட்டம்

# 29 ஆம் திகதி எதிர்ப்புப் போராட்டம் மன்னார் மீனவ சங்கங்கள் முழு ஆதரவு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் முழுவதும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பொது அமைப்புகள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து மேற்கொள்ள இருக்கின்ற விழிப்புணர்வு கவனயீர்ப்பு போராட்டத்திற்கு தங்களுடைய முழு ஆதரவையும் வழங்குவதாக மீனவ சங்கங்கள் தீர்மானித்துள்ளதாக மன்னார் மீனவர் சமாச செயலாளர் மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காற்றாலை கோபுரங்களாலும் அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து இடம் பெறும் 'கனியவள மணல் அகழ்வு ஆய்வுக்காக இடம்பெறுவதாக சொல்லப்பட்டாலும் இன்று வரை 4000 துளைகளுக்கு மேல் போடப்பட்டுள்ளது. எனவே இவைகள் இரண்டு செயற்றிட்டங்கள் தொடர்பாக மீனவ சமூகம் சார்ந்து தொடர்ச்சியாக போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் வெளிக்காட்டிய போதும் இந்த செயற்பாட்டை எங்களால் தடுத்து நிறுத்த முடியாத நிலையே இதுவரை காணப்படுகின்றது.

இதன் அடிப்படையில் கடந்த வாரம் பிரஜைகள் குழுவினால் காற்றாலைக்கு எதிராக முன்னெடுத்து வருகின்ற போராட்டத்தை முழுமைக்கும் விதமாக காற்றாலை மின் செயற்றிட்டத்தை நிறுத்தி செயற்றிட்டத்தை தீவுக்கு அப்பால் கொண்டு செல்லும்படி வலியுறுத்தும் முகமாக எதிர்வரும் திங்கட்கிழமை மாபெரும் கண்டன பேரணி ஒன்றை நடத்துவதற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சிவில் அமைப்புகளும் ஒன்றுகூடி தீர்மானித்துள்ளோம்.

இதன் அடிப்படையில் வருகின்ற 29 ஆம் திகதி முழுமையாக கடற்றொழில் நிறுத்தப்பட்டு அனைத்து மீனவர்களின் பங்களிப்போடு இந்த அமைதியான கண்டன பேரணி மன்னார் பேருந்து நிலையத்தில் நடைபெறும்.

இந்த போராட்டத்திற்கு கடல் சார்ந்த சமூகமும் ஏனைய பொதுமக்களும் கலந்துகொண்டு தங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் செலுத்தி இந்த காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு செயற்றிட்டம் ஆகிய இரண்டையும் மன்னார் தீவில் இருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு அனைத்து இன மக்களும் வலுச் சேர்க்க வேண்டும் என கோரிக்கைவிடுத்தார். (4-285)

## நீர்க்கட்டணமும் அதிகரிப்பு

(கொழும்பு)

நீர்க் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (நி)

## பாடசாலை மாணவர்களுக்கு உணவளிக்க 320 மெற்றிக்தொன் கொண்டைக் கடலை

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவளிக்க அமெரிக்கா 320 மெற்றிக்தொன் கொண்டைக்கடலையை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் விவசாயத் திணைக்களத்தின் ஊடாக நேற்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் இந்த உணவுப் பொருட்கள் கையளிக்கப்பட்டதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளிக்க 3000 மெற்றிக் தொன் உணவுத் தொகுப்பின் ஒரு பகுதியாக இது வழங்கப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தளபதி விக்கும் லியனகே நேற்று யாழ். பலாலிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் பலாலி சந்தி பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நல்லிணக்க மையம் இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் விக்கும் லியனகேவினால் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.**



நல்லிணக்கத்தின் செயற்றிட்டமாக ஆரோக்கியம் நிறைந்த நோயற்ற சந்ததியினரை உருவாக்குவதற்கு இராணுவத்தின் பங்களிப்புடன் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தினை உருவாக்கும் முகமாக இந்த நல்லிணக்க மையம் திறந்து வைக்கப்பட்டது.

புதிதாக பதவியேற்ற இராணுவத் தளபதியின் முதலாவது யாழ். மாவட்ட விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இராணுவத் தளபதி யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள நிகழ்வுகளில் கலந்து கொண்டார். (4-33)

# கால்நடைகளுடன் இருவர் கைது



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஆறு கால்நடைகளை லொறி ஒன்றின் மூலம் ஏற்றி குருநாகல் தம்பதெனியாப் பகுதிக்கு கொண்டு செல்ல முற்பட்ட வேளை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து லொறியின் சாரதியும் மற்றொரு நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இருந்தபோதிலும் இரவு வேளைகளில் கால்நடை கொண்டு செல்ல முடியாத காரணத்தினாலும் சுகாதார பரிசோதகரின் மருத்துவச் சான்றிதழ் இல்லாத காரணத்தினாலும் மற்றும் கால்நடை கொண்டு செல்லக்கூடிய வசதிகள் வாகனத்தில் ஏற்படுத்தி கொடுக்கப்படாத காரணத்தினாலும் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-316)

# சேதுகாவலப் பிள்ளையார் அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

யாழ்.குப்பிழான் முத்தர் வளவு சேதுகாவலப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு விசேட அபிஷேக பூசைகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் தினமும் மாலை 6.30 மணிக்குப் பூசைகளுடன் ஆரம்பமாகி இடம்பெறும்.

இதேவேளை, அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான அடுத்தமாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்றையதினம் பிற்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசையும்(அன்னதானம்) நடைபெறும். (4-18)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்திற்கு எனப் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற உள்ளது.

அதனைத் தொடர்ந்து இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வும் நடைபெறும் என மேற்படி ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (4-18)

# வவுனியா பல்கலையின் வீதியோட்ட நிகழ்வு

(நெளுக்குளம்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் மாபெரும் வீதியோட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் 1 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் விதமாக வவுனியா பல்கலைக் கழகத்தின் உடற்கல்வி அலகின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. குறித்த நிகழ்வானது காலை 6 மணிக்கு வவுனியா பல்கலைக்கழக பூங்கா வீதியில் ஆரம்பித்து வவுனியா பல்கலைக்கழகத்தின் பம்பை மடுவில் முடிவடையவுள்ளது. (4-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 600 |
| தக்காளி | 250 | 150 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 240 |
| கோவா | 400 | 500 | 450 | 440 |
| கரட் | 320 | 350 | 380 | 400 |
| பூசணி | 120 | 120 | 120 | 140 |
| புடோல் | 140 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 180 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 200-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 450 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 250 | 240 |
| பயற்றங்காய் | 300 | 220 | 120 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 270 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 400 |
| போஞ்சி | 420 | 300 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 300 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 70-100 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 60 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 180 |

## யாழ். மத்திய கல்லூரி

# உயர்தர மாணவர்களுக்கு அதிபரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் க.பொ.த உயர்தர 2024 பிரிவு மாணவர்கள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சீருடையுடன் கல்லூரிக்குச் சமூகம் அளிக்கவும். அத்துடன் GIT பரீட்சைக்குத் தோற்றவுள்ள உயர்தர 2019/20/21 பிரிவு மாணவர்கள் தமது பகுதித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு online மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (4)

## நிர்வாகசபைக் கூட்டம்

(சாவகச்சேரி)

கிளிநொச்சி உருத்திரபுரம் அகில இலங்கை காந்திசேவா சங்க நிர்வாகசபைக் கூட்டம் நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு உருத்திரபுரம் காந்தி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற உள்ள மேற்படி கூட்டத்திற்கு நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (4-29)

# மீசாலையில் விபத்து முதியவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை ஐயா கடைச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து சம்பவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மீசாலை பங்களா வீதிப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

## பொதுக் கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சங்கத்தலைவர் [illegible] தலைமையில் இடம் பெறவுள்ளது. (4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

ழுந்துள்ளார்.

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியைச் சேர்ந்த உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார், கப் வாகனத்தின் சாரதியை கைது செய்து நேற்று நீதிமன்றில் முன்னிறுத்தினர்.

குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7,100,316)

## மோட்டார் சைக்கி...

குறித்த பெண் கர்ப்பமாக உள்ள நிலையில் மருத்துவ பரிசோதனைக்காக காரைநகரில் இருந்து மூளாய் வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் கணவனால் அழைத்து செல்லப்பட்ட நிலையில் பொன்னாலை பாலத்தடியில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழுந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,18,33,104)

## ஒடுக்கும் நடவடி...

மேற்கு மற்றும் தெற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பயங்கரவாத விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பொலிஸ் விசேட அதிரடிப் படை, பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய புலனாய்வுத் திணைக்களங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தன. (ம-7)

## மூன்று மீன்பிடி...

மீனவர்கள் அதை அணைக்க முற்பட்ட முயற்சியும் தோல்வியில் முடிய மூன்று வாடிகளும் முற்றாக தீயில் எரிந்துள்ளன.

சிறு தொழிலாளர்களின் பல கோடிரூபா பெறுமதியான வலைகளும் குறித்த வாடிகளில் இருந்ததாகவும் அவர்களுடைய வலைகளும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில் குறித்த இடத்திற்கு சென்ற மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7,60)

## விடுதலையானார்...

டுள்ளார்.

இதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "நிபந்தனை அடிப்படையிலேயே எனக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, சில விடயங்கள் தொடர்பில் கதைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு கதைத்தால் மீண்டும் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். எனக்கு உண்மை கதைத்துத்தான் பழக்கம். ஆனாலும், நிபந்தனை உள்ளது.

எனினும், பொது மன்னிப்பு வழங்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பிரதம நீதியரசர், நீதிபதிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அனைவருக்கும் நன்றிகள். எனக்காகக் குரல் கொடுத்த மக்களுக்கும் நன்றி.

மேலும் நான் மாறப்போவதில்லை. கட்சி மாறவும் மாட்டேன்" என கூறியுள்ளார். (ம-7)

## நிதி நெருக்கடி...

திருத்தம் மற்றும் மதுவரிச் சட்டம் உள்ளிட்ட திறைசேரி தொடர்பான நேற்றைய கலந்துரையாடலில், தேவையான மேலதிக தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க, எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் தகவல்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆலோசகர்கள், சட்ட ஆலோசகர்கள் நேற்றைய பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதுடன் [illegible] அடுத்தச் சுற்றுப் பேச்சுவார்த்தை[illegible] நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் சபையின் தலைவர் பீட்டர் ப்ரூயர் (Peter Breuer), பிரதித் தலைவர் ஒசைரோ கொசைகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டொபாகன்ஸ், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் உட்பட மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ம-7)

## சர்ச்சைக்குரிய...

காலமாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த காணிகளில் ஒருதொகுதி கடந்த நல்லாட்சி அரசில் விடுவிக்கப்பட்டன.

அதன்போது கட்டுவன் - மயிலிட்டி வீதி விடுவிக்கப்பட்டு அதன் மேற்குப் புறமான மக்களின் காணிகளும் விடுவிக்கப்பட்டன.

எனினும் இந்த வீதியில் இடையில் சுமார் 480 மீற்றர் வீதிப் பகுதி (மயிலிட்டி தெற்கில்) உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருந்தது. அதனை முட்கம்பி வேலியால் மூடி வளைத்து வீதியின் ஏனைய பகுதியை விடுவித்தனர்.

இந்நிலையில் சர்ச்சைக்குரிய குறித்த பகுதி நேற்று விடுவிக்கப்பட்டது. (ம-7,33,104)

## வங்கி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் நிதித்திறனை கருத்திற்கொண்டு எரிபொருளை இறக்குமதிசெய்யவேண்டியுள்ளது. அதேவேளை சிறந்த முகாமைத்துவத்துடன் மக்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காகவே குறித்த முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனினும், எரிபொருள் நெருக்கடிக்கு தேசிய எரிபொருள் அட்டையின் கியூ.ஆர் முறைமை திட்டவட்டமான தீர்வாகாது எனவும் கூறியுள்ளார்.

மேலும், மத்திய வங்கியின் ஊடாக எரிபொருளைப் பெறுவதற்கு ஒதுக்கப்படும் பணத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோக வரம்பு தீர்மானிக்கப்படும் என்வும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிபொருள் இறக்குவதில் ஏற்பட்ட [illegible] காரணமாக நேற்று நாடு முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வங்கி அனுமதிப்பத்திர பிரச்சினை காரணமாகவே எரிபொருட்களை இறக்குவதில் தாமதம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த எரிபொருள் தாமதத்தால் அனைத்து எரிபொருள் நிலையங்களில் மீண்டும் வரிசைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்நிலையில், எரிபொருளை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருட்கள் விநியோகிக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பல குழந்தைகள்...

மதி செய்வதற்கு வெளிநாட்டு நாணயம் இல்லாமல் போனதை அடுத்து, இலங்கை வரலாற்றில் மிக மோசமான வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

இந்தநிலையில் வழக்கமான உணவைத் தவிர்க்கும் குடும்பங்களால் இந்த நெருக்கடி கடுமையாக உணரப்படுகிறது என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பின் (யுனிசெஃப்) தெற்காசிய இயக்குனர் ஜோர்ஜ் லாரியா-அட்ஜெய் கூறியுள்ளார்.

சிறுவர்கள் பசியுடன் படுக்கைக்குச் செல்கிறார்கள், அவர்களுக்கு அடுத்த உணவு எங்கிருந்து வரும் என்று அவர்களுக்கே தெரியவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/08/26
சீட்டிழுப்பு இலக்கம் 4859
X 7 8 0 5 2 8

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 168
மகரம் 07 52 57 61 மகரம்

மெகா பவர்
திகதி 26/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1207
D 10 26 30 63 71

கொவிசெத
திகதி 2022.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 3101
A 10 16 20 39

தன நிதானய
திகதி - 2022.08.26
சீட்டிழுப்பு இலக்கம் - 889
L 24 65 66 71

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1316
துலாம் 4 1 8 5 6 1

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1660
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2022.08.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,684,700/-
05 37 52 61 Q

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.08.26
சீட்டிழுப்பு இல: 3995
வர்ணம்: செம்மஞ்சள்
ரூ. 4,144,900/-
03 09 17 20 D

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 214
சீட்டிழுப்பு திகதி 2022.08.26
வெள்ளிக்கிழமை
08 20 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,099,740/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,166,760/-
திகதி 2022-08-26
வெற்றி வாரம் 3546
வர்ணம் நீலம்
33 34 48 54
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,589,400/-

லக்ன வாசனா
M 06 22 54 56 64
சீட்டிழுப்பு வாரம் 1010
வர்ணம் ஊதா
2022.08.26 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 256,292,773/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1834
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.08.26
தினம் வெள்ளிக்கிழமை
F 19 20 51 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,705,620/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி

தொடர்புகளுக்கு:-

**076 755 8606**

**077 259 0391**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு புரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் மட்டும்

தொடர்புகளுக்கு:-

**077 911 6983**

**077 148 8348**

யாழ்ப்பாணம் புத்தூரில் 186 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 ½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை இரண்டு இலட்சம் மட்டும்

(12553)

தொடர்புகளுக்கு:-

**077 658 5999**

**076 438 5814**

**077 874 8135**



# காணி விற்பனைக்கு



யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்தி பெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ்.நகரில் இருந்து 8Km தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல் வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சிய சாலைகள் அமைப்பதற்கும் திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- தரகர் தேவையில்லை.




(12548, 12578)

## தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 814 7389, 077 241 7589**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.